திரு. செ. கோ. விஸ்வநாதன்: இளம் குற்றவாளிகள் பலர் மாணவர்களாக எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் படிக்கிறார்கள். தண்டனை காலம் முடிந்த பிறகு அவர்களை வெளியேற்றும் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதைப் போக்க அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உண்டா? அவர்களுக்கு மேல் படிப்புக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மற்றவர்களுக்கு இருக்கும் வசதிகள் இவர்களுக்கும் இருக்கும். அரசாங்கம் இதை கவனிப்பதோடு அந்தந்த ஸ்தலங்களில் இருக்கும் பொது மக்கள் இதில் அக்கறை எடுத்துக்கொண்டால் நலம்.

திரு. இராம. அரங்கண்ணல்: வெண்ணை திருடுதல், சேலை திருடுதல் ஆகிய கிருஷ்ண லீலைகள் போன்ற கதைகளை இளம் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்காமல் தடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எத்தனையோ கதைகள் இருக்கின்றன. அவைகளை நல்ல முறையிலும் சொல்லிக்கொடுக்கலாம், கெடுதலான முறையிலும் சொல்லிக்கொடுக்கலாம்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: இளம் குற்றவாளிகள் என்னும்போது சிறுமிகளும் இடம் பெறலாமல்லவா? அவர்களுக்குத் தனி ஏற்பாடு உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்களும் இடம் பெறுகிறார்கள். அவர்களுக்குத் தனி ஏற்பாடு உண்டு.

நில ஆர்ஜிதம்

*131 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை சுற்றுப்புற அபிவிருத்திக்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதில் ஏதேனும் சட்டபிரிவுகள் செயல் திறனற்றவையாக உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதனை திருத்தியமைக்கும் உத்தேசம் உண்டா?

(உ) இது சம்பந்தமாக உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அரசாங்கம் பரிசீலித்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) இல்லை.

(இ) & (உ) இந்த கேள்விகளுக்கு இடமில்லை.

Milk-supply Co-operative Societies

*132 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the total number of Milk Supply Co-operative Societies in the State as on 1st June 1962;

5th March 1963]

(b) the total number of members in the societies; and

(c) the total amount of loan granted to those societies for the purchase of milch animals?

THE HON. SRI P. KAKKAN : (a) 1,222.

(b) 1,14,638.

(c) A sum of Rs. 13 lakhs has been disbursed as State loans for the purchase of milch animals by the members of Milk Supply Co-operative Societies during 1961–62.

(அ) 1,222.

(இ) 114,638.

(உ) பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் கறவை மாடுகளை வாங்குவதற்காக 1961-62-ல் 13 லட்சம் ரூபாய் அரசாங்கக் கடன்களாக வழங்கப்பட்டிருக்கிறது.

கழிநீர்க் கால்வாய்த் திட்டம்

**113 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தமிழ் நாட்டில், கழிநீர்க் கால்வாய் அமையப் பெற்ற நகராட்சி மன்ற நகரங்கள், ஊராட்சி மன்றப் பேரூர்கள், ஊராட்சி மன்றச் சிற்றூர்கள் எத்தனை ?

(இ) அமையவேண்டிய நகரங்களும், பேரூர்களும், சிற்றூர்களும் எத்தனை ?

(உ) அவை அமைய அரசு மேற்கொள்ளவிருக்கும் திட்டம் யாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *(அ) 10 முனிசிபாலிட்டிகள், 1 டவுன்ஷிப், 1 பெரிய பஞ்சாயத்து.*

(இ) 54 முனிசிபாலிட்டிகள், 3 டவுன்ஷிப்புகள், 140 பெரிய பஞ்சாயத்துக்கள்.

(உ) மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், முனிசிபாலிட்டிகள் சம்பந்தமாய் 6 வடிகால் திட்டங்களையும், பெரிய பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாய் 4 திட்டங்களையும் மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம். இவை தவிர, 4 முனிசிபல் வடிகால் திட்டங்களுக்கு விரிவான முறையில் அபிவிருத்தி செய்யவும் உத்தேசித்துள்ளோம்.

புலவர் கா. கோவிந்தன் : குடிநீர் குழாய் திட்டங்கள் அமைந்திருக்கிற ஊர்களில் கழிநீர்க் கால்வாய் திட்டம் இல்லாத காரணத்தினுல், தெருக்களில் ஆங்காங்கு குட்டை குட்டையாக தண்ணீர் தேங்கி கொசு வளர இடம் அளிக்கிறது. ஆகவே, கழிநீர்க் கால்வாய் திட்டத்தை, குடிநீர் திட்டத்தை வழங்கியிருக்கிற ஊர்களுக்கு அளிப்பதற்கு முதல் இடம் கொடுக்கப்படுமா ? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிதி வசதியைப் பொறுத்திருக்கிறது. எதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும்